

COMMUNITY SAFETY
& WELL-BEING

பிராம்ப்டன் நகரம்

# அக்கம்பக்கத்தவர் சங்கம் பற்றிய வழிகாட்டி ஏடு

BRAMPTON

# பொருளடக்கம்


1. அறிமுகம் 3

2. அக்கம்பக்கத்தவர் சங்கம் என்பது என்ன? 5

3. பிராம்ப்டன் அக்கம்பக்கத்தவர் சங்கத்தை இணைத்தல் 7

அ. நகரத்துடன் இணைவது ஏன்? 8

ஆ. நகரத்துடன் இணைய எவையெல்லாம் தேவை? 9

இ. இணைவதற்கான செயல்முறை என்ன? 10

ஈ. அக்கம்பக்கத்தவர் சங்கத்தினை இணைப்பதில் நகர நிர்வாகத்தின் பங்கு என்ன? 12

உ. இணைவதற்கான ஒப்புதல் நிலை 12

ஊ. ஒப்புதல் நிலையை முடிவுக்குக் கொண்டுவருதல் 13

4. மக்களை இணைத்தல் 14

அ. துவக்குவது எப்படி! 15

ஆ. உறுப்பினர்களை சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் இருக்கச் செய்வது எப்படி! 17

5. நடவடிக்கை எடுத்தல் 18

அ. வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் மானியத்தை நகர நிர்வாகத்திடமிருந்து பெறுவதற்கான வாய்ப்புகள் 19

ஆ. வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்கத்திற்கான மானியத்தின் சாத்தியமான பலன்கள் 20

இ. ஒரு வருடத்திற்கான திட்டப்பணிகளின் எண்ணிக்கை 26

ஈ. வெற்றிகரமான திட்டப்பணிகள் 26

6. அக்கம்பக்கத்தவர் சங்கம் செயல்திட்டம் 27

அ. அக்கம்பக்கத்தவர் சங்க செயல்திட்டத்தை உருவாக்குவது ஏன்? 28

ஆ. அணுகுமுறை 29

இ. சொத்து அடையாளம் காணும் செயல்பாடு 30

7. உங்களுக்கு அருகாமையிலிருக்கும் அக்கம்பக்கத்தவர் சங்கம் சிறப்பம்சங்கள் 31

8. ஆமோதிப்புக்கள் 33




# பாகம் ஒன்று

# அறிமுகம்



# அறிமுகம்

பிராம்ப்டன் நகர சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனுக்கான அலுவலகமானது (CSWO), பிராம்ப்டன் அக்கம்பக்கத்தவர் சங்கம் பற்றிய வழிகாட்டி ஏட்டினை வழங்குவதில் பரவசமடைகிறது. அமைவிடம் சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, அக்கம்பக்க சுற்றுப்புறங்கள் எங்கள் வேலையின் மையக்கருத்தாக உள்ளன. வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கங்கள் திட்டத்தின் குடியிருப்புவாசிகளின் ஈடுபாடுகள் மூலம், சமூகத்தில் நேர்மறையான தாக்கங்களை உருவாக்குவதற்கு, பாதுகாப்பாக உணர்தல், ஆதாரவளங்களுடன் இணைந்திருத்தல் மற்றும் சொந்தம் கொண்ட தன்மை உணர்வைக் கொண்டிருப்பது ஆகியவை முக்கியம் என்று CSWO அறிகிறது.

அக்கம்பக்கத்தவர் சங்கம் பற்றிய வழிகாட்டி ஏடு என்பது நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு செயல் திட்டத்தில் (2022-2027) அடையாளம் காணப்பட்ட ஒரு தந்திரமாகும். இந்த ஆதாரவளமானது கொள்திறனை வளர்ப்பதற்கும், குடியிருப்பாளர்கள் அடங்கிய வலையமைப்பை நிறுவுவதற்கும், அவர்களின் சுற்றுப்புறங்களில் உள்ள பாதுகாப்பு சார்ந்த கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும் சமாளிப்பதற்கும் கூட்டாக வேலை செய்வதற்கு இது ஆதரவு தரும்.

அக்கம்பக்கத்தவர் சங்கம் பற்றிய வழிகாட்டி ஏடு என்பது தன்னார்வலர்களால் ஆளுமை செய்யப்படுகின்ற, குடியிருப்புவாசிகள் கொண்ட குழுக்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது அல்லது குடியிருப்புவாசிகளின் நல்வாழ்வை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள நபர்களால் நிர்வகிக்கப்படுகிறது, மேலும் வளர்க்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்க மானியத்தின் பயன்பாட்டை, CSWO கோடிட்டுக் காட்டுகிறது.



COMMUNITY SAFETY & WELL-BEING

# பாகம் இரண்டு

# அக்கம்பக்கத்தவர் சங்கம் என்றால் என்ன?

# அக்கம்பக்கத்தவர் சங்கம் என்றால் என்ன?

அக்கம்பக்கத்தவர் சங்கம் என்பது, அதே அக்கம்பக்கச் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்புவாசிகளின் தன்னார்வக் குழுவாகும், இவர்கள் தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து, அந்த மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒன்றுகூடிச் செயல்படுகிறார்கள்.

அக்கம்பக்கம் என்பது மக்கள் தாங்கள் வசித்தபடி ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் பகுதி என விவரிக்கப்படுகிறது. ஒவ்வொரு அக்கம்பக்கத்தவர் சங்கத்திற்கும் அவர்களின் சொந்த எல்லைகளை வரையறுக்குமாறு நாங்கள் விட்டுவிடுகிறோம்; இது புவியியல் அமைவிடம், வசதிகளுக்கான அருகாமை, பகிரப்பட்ட இலக்குகள், மதிப்புகள் மற்றும்/அல்லது அவர்களின் பகுதியின் ஒட்டுமொத்த உணர்வு மற்றும் அடையாளம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலானதாகும். தற்போதுள்ள அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் CSWO உதவ முடியும் மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பரஸ்பர உரிமைகோரல் வழக்குகள் எவற்றுக்கும் தீர்வு காண உதவலாம்.

அக்கம்பக்கத்தவர் சங்கம் என்பது சக குடியிருப்புவாசிகளைச் சந்திக்கவும், அக்கம்பக்கத்தில் உள்ள பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும், சமூகத்தை மேம்படுத்த கூட்டாகச் செயல்பட வைக்கவும் ஒரு சிறந்த வழியாகும். இணைக்கப்பட்ட அக்கம்பக்கங்களே நெகிழ்ந்துகொடுக்க வல்ல அக்கம்பக்கங்களாகும்.

*"அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் என்பவை அக்கம்பக்கத்தவருடன் நட்புறவையும், அறிவையும் அதிகரிக்கின்றன."*

- குடியிருப்புவாசி, வளர்த்தெடுக்கும் அக்கம்பக்கத்தவர் நிகழ்ச்சி பற்றிய கருத்தாய்வு

COMMUNITY SAFETY
& WELL-BEING



# பாகம் மூன்று

# பிராம்ப்டன் அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்பு என்றால் என்ன?

பிராம்ப்டனில் உள்ள அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் நகரத்துடன் இணைந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றன. சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கான நகரத்தின் பெருநிறுவன மூலோபாயம் எதில் கவனம் செலுத்துகிறதோ அந்தப் பகுதிகளுக்கு பங்களிக்கும் குழுக்களுக்கு இணைக்கப்பட்ட அந்தஸ்து வழங்கப்படுகிறது.

# A நகரத்துடன் ஏன் இணைப்பாக இருக்க விழைய வேண்டும்?

நகரத்துடன் இணைப்பாக இருக்க விழைவது என்பது பின்வரும் வாய்ப்புக்களுக்கு CSWO மூலமாக வழிகோலும்:

| ✓ | CSWO மூலமாகக் கிடைக்கும் பலன்கள் |
|---|---|
| | CSWO ஆனது, செயல்பாடுகள், சிறப்பு நிகழ்ச்சிகள், திட்டப்பணிகள், கூட்டங்கள் நடத்துதல் மற்றும் சம்பந்தப்பட்ட பொருள் விநியோகம் ஆகியவற்றுக்காக, அக்கபக்கத்தவர் சங்கங்களுக்கு, வளர்த்தெடுக்கப்படும் அக்கம்பக்கத்தவர்க்கான மானிய நிதியிலிருந்து **$1,500** வரையில் உதவித்தொகை வழங்கும். |
| | நிர்வாக மன்றக் கூட்டங்கள் மற்றும்/அல்லது வருடாந்திர பொதுக் கூட்டங்களுக்கு (கொள்திறன் வரம்புகளுக்கு உட்பட்டது) நகர்மன்ற வெஸ்ட் டவர் கட்டிடத்தில் (2வது அல்லது 3வது தளத்தில்) CSWO மூலம் போர்டுரூம் சந்திப்புக்கான முன்பதிவுகள். |
| | CSWO வின் சமூக பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் நகர நிர்வாகத்துடன் தொடர்புக்கான அணுகல். |
| | வரவிருக்கும் சமூகப் பாதுகாப்பு & நல்வாழ்வு டிஜிட்டல் செய்திமடலில் இடம்பெறுவதற்கான வாய்ப்பு. |
| | பிராம்ப்டன் சமூக பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் (BCSAC) ஆலோசனை மற்றும் ஆதரவிற்கான அணுகல். |
| | CSWO ஆல் அங்கீகரிக்கப்பட்ட, அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் கூட்டு முன்முயற்சிகளை உள்ளடக்கும் பொது கொடுக்கல் பொறுப்புக் காப்பீடு. சமூக சேவைகள் சமூகக் குழு (Community Services Community Group) இணைப்புக் கொள்கையின் மூலம் பிராம்ப்டன் நகரம் இந்தக் காப்பீட்டிற்கான செலவை ஏற்கும், மற்றும் அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர்க்கான மானியம் வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் செயல்களின் முழுப் பட்டியல் தேவைப்படும். |
| | தகவல்கள், யோசனைகள், ஆதாரவளங்களைப் பகிர்தல் மற்றும் இணைவதற்கான வாய்ப்புகளுக்காக பிற அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கான அணுகல். |

இணைக்கப்பட்டதாக மாறுவது என்பது CSWO ஆல் ஆதரிக்கப்படும் சங்கங்களுடன் நெட்வொர்க்கிங் செய்துகொள்ள மற்றும் பிற அக்கம்பக்கத்துடன் இணைக்க அனுமதிக்கிறது என அர்த்தமாகும்; பின்வரும் கூடுதல் சலுகைகளும் கிடைக்கும்

| ✓ | பலன்கள் |
|---|---|
| | சமூக ஈடுபாட்டை ஆதரிக்கின்ற மற்றும் வலுப்படுத்துகின்ற வகையிலான பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளுக்கான அணுகல். |
| | சங்க உறுப்பினராக இருக்கும் தன்னார்வத் தொண்டர்கள் தலைமையில் அக்கம் பக்கத்தவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல். |
| | அக்கம்பக்கத்தினர் தலைமையிலான முயற்சிகளுக்கு நகர அங்கீகாரம்; இது சமூக பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை அதிகரிக்கச் செய்யும். |
| | உள்ளூர் அக்கப்பக்கத்தவர் சுற்றுப்புறக் கவலைகளை நிவர்த்தி செய்ய, சங்க உறுப்பினர்கள் நகரத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகளுக்கான அணுகல் |

# B நகரத்துடன் இணைய விழைவதற்கு என்ன தேவைப்படுகிறது?

அங்கீகரிக்கப்பட்ட இணைந்த குழுவாக ஆவதற்கான தகுதிபெறவும், பொருந்தக்கூடிய ஆதரவுகள் மற்றும் பலன்களைப் பெறவும், அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் பின்வரும் அனைத்துத் தேவைகள் மற்றும் தகுதிக் காரணிகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

| ✓ | தேவைகள் மற்றும் தகுதி |
|---|---|
| **1** | **புவியியல்** |
| | அக்கம்பக்கத்தவர் சங்கம் பிராம்ப்டன் நகருக்குள் அமைந்திருக்க வேண்டும்.<br>அனைத்து உறுப்பினர்களும் தங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்தால் நிறுவப்பட்டு, வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைக்குள் வசிக்க வேண்டும்.<br>CSWO அமைப்பானது விண்ணப்ப செயல்முறையின் ஒரு பகுதியாக முன்மொழியப்பட்ட எல்லைகளை மதிப்பாய்வு செய்து அங்கீகரிக்கும்; மற்றும் இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் பரஸ்பர உரிமைகோரல் சச்சரவுகளைத் தீர்க்க உதவும்.<br>இதுபோன்ற சந்தர்ப்பங்களில், CSWO இரு தரப்பினருடனும் இணைந்து, ஒரு தீர்வைக் கண்டறியும். விளைவுகளில் பின்வருபவை அடங்கும் ஆனால் இவை அல்லாதனவும் இருக்கலாம்:<br>• இணைக்கும் நோக்கத்திற்காக அக்கம்பக்கத்தவர் சங்கங்களை ஒருமித்தல்,<br>• ஒரே புவியியல் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பல அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் ஒரே நேரத்தில் நிதியுதவிக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்ற கட்டுப்பாட்டுடன், இணைப்பு வழங்குதல்<br>• இணைப்பு நிலை மறுப்பு |
| **2** | **நிதிநிலை ஸ்திரமானதன்மை** |
| | அக்கம்பக்கத்தவர் சங்கம் நல்ல நிதி மேலாண்மை நடைமுறைகளையும் வெளிப்படைத்தன்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். CSWO ஆனது, அக்கம்பக்கத்தவர் சங்கம் பயன்படுத்தும் வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்கத்தினருக்கான மானிய நிதியை, செலவுசெய்து முடிக்கும் கால அவகாசம் மற்றும் புதுப்பித்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக வருடாந்திர அடிப்படையில் மதிப்பாய்வு செய்யும். |

| ✓ | தேவைகள் மற்றும் தகுதி |
|---|---|
| **3** | **கட்டமைப்பு** |
| | பொது உறுப்பினர், பொருளாளர் ஆகிய, இரண்டு முக்கிய பதவிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் மற்றும் CSWO மற்றும் அக்கம்பக்கத்தவர் சங்கம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புக்கான முக்கிய நபர் ஒருவரை நியமிப்பதன் மூலமும் அக்கம்பக்கத்தவர் சங்கம் திறந்த மனதுடன் மற்றும் ஜனநாயக முறையில் செயல்பட வேண்டும். தேர்தல் செயல்முறை பற்றிய கூடுதல் தகவலுக்கு, அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் CSWO வின் ஆதரவுக்காக அணுகலாம். |
| | 50% எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் |
| | ஒரு வீட்டிற்கு ஒரு (1) வாக்காளர் அனுமதிக்கப்படுகிறது. |
| | அக்கம்பக்கத்தவர் சங்கமானது, ஒவ்வொருவரும் வெவ்வேறு தனித்தனி குடும்பங்கள் மற்றும் ஒரே அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த குறைந்தளவு இருபது (20) பிராம்ப்டன் குடியிருப்புவாசிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். CSWO அமைப்பானது, விண்ணப்பங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட எல்லைகளை மதிப்பாய்வு செய்யும்; மற்றும் தேவையற்ற சமூகப் பிரிவினையைத் தவிர்ப்பதற்காக விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே உள்ள அக்கம்பக்க சங்கத்தில் சேர விரும்புபவர்கள் பற்றி அடையாளம் காணும். |
| | அக்கம்பக்கத்தவர் சங்கமானது தன்னார்வ அடிப்படையிலான ஒரு குழுவாக இருந்தாகவேண்டும். |
| **4** | **ஒப்பந்தம்** |
| | அக்கம்பக்கத்தவர் சங்கங்கள், CSWO அமைப்பு வழங்குகின்ற இணைப்பு மற்றும் பிற சம்பந்தப்பட்ட தகவல்களின் நிபந்தனைகளை கோடிட்டுக் காட்டுகின்ற ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, கடைப்பிடிக்கவும் வேண்டும். |
| **5** | **செயல்பாடுகள்** |
| | அக்கம்பக்கத்தவர் சங்கமானது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அக்கம் பக்கத்தவர் சார்ந்த செயல்பாடு, திட்டம் அல்லது நிகழ்வு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்; இது நகரத்தின் கார்ப்பரேட் மூலோபாயம் கவனம் செலுத்துகின்ற பகுதிகளான உடல்நலம் மற்றும் நல்வாழ்வு மற்றும் பிராம்ப்டன் நகரின் சமூகப் பாதுகாப்பு செயல் திட்டத்தை ஆதரிப்பதாக இருக்க வேண்டும்.<br><br>அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் தாங்கள் மேற்கொள்ளும் எந்த செயல்பாடுகள்/அட்டவணைகள்/தேதிகளின் நகலை முன்கூட்டியே CSWO விடம் சமர்ப்பிக்க வேண்டும். (அதாவது, சுற்றுப்புறத்தை தூய்மை செய்தல், மரக்கன்றுகள் நடவு செய்தல், விருந்துபச்சாரங்கள் போன்றவை); இதில் செலவுகள் மற்றும் வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் மானிய நிதி பயன்பாடு தொடர்பான தகவல்களும் சேர்க்கப்படவேண்டும். |
| **6** | **பிற தேவைகள்** |
| | அக்கம்பக்கத்தவர் சங்கமானது, இணைப்பு வழங்கப்பட்ட வருடத்திற்குள் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தை (AGM) நடத்த வேண்டும்<br><br>கூட்டத்தினரின் வருகையைப் பதிவு செய்து கூட்ட நடவடிக்கைகளையும் பதிவேடாக வைத்திருக்க வேண்டும். |
| | அக்கம்பக்கத்தவர் சங்கமானது, ஒன்ட்டாரியோ மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு (Ontario Human Rights Code) இணக்கமாக இருக்கவேண்டும் |
| | அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் கூட்டமைப்பானது CSWO விடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணிசமான மாற்றங்கள் எவையும் (அதாவது, முக்கிய தொடர்பாளர், பொருளாளர், முதலானவை) இருந்தால், அவை பற்றிய புதுத்தகவல்கள் அல்லது மாற்றங்கள் முப்பது (30) நாட்களுக்குள் CSWO விடம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| | எந்த ஒரு வருடாந்திர அல்லது சிறப்பு பொது உறுப்பினர் கூட்டங்களுக்கும், ஒரு மாதம் முன்னதாக CSWO க்கு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும். |

# C இணைப்பு செய்ய விழைவதற்கான செயல்முறைகள் எவை?

இணைப்பு செய்ய விழைவதற்கான செயல்முறைகள் இவ்வளவு காலமாக இப்படி சுலபமாக இருந்ததில்லை?

| ✓ | படிகள் |
|---|---|
| **1** | **CSWO வலைத்தளத்தில் சென்று பார்க்கவும்** |
| | www.brampton.ca/communitysafety எனும் வலைத்தளத்தைப் பார்வையிடவும். |
| | சுட்டிக்காட்டப்பட்ட தேவைகள் மற்றும் தகுதிகளை (www.brampton.ca/communitysafety யில் அல்லது இந்த வழிகாட்டி ஏட்டின் பக்கங்கள் 9-10 இல் கிடைக்கின்றன) படித்துப் பார்க்கவும். |
| | தேவைப்பாடுகள் பற்றிய அதிக தகவல்கள் தேவைப்படின் CSWO ஐ (CSWO@brampton.ca) யில் தொடர்புகொள்ளவும். |
| **2** | **ஆன்லைன் விண்ணப்பத்தை நிரப்பி பூர்த்தி செய்யவும்** |
| | உங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கமானது, இந்தத் தேவைகள் மற்றும் தகுதி காரணிகளை பூர்த்தி செய்தால், ஏற்றுக்கொள்ளும் காலத்திற்குள் ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும். கோரிக்கையின் பேரில் மாற்று வடிவங்களில் படிவங்கள் கிடைக்கின்றன. CSWO திட்டப்பணிக்கான வேலைத் திட்டம் மற்றும் பட்ஜெட் வடிவுருவை அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் பூர்த்தி செய்யத் தேவைப்படும். |
| | அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் விண்ணபத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது பிற ஆதரவுக்காக CSWO வை (CSWO@brampton.ca) இல் தொடர்பு கொள்ளலாம். |
| **3** | **விண்ணப்பத்தினைப் பரிசீலனை செய்தல்** |
| | அனைத்து விண்ணப்பங்களையும் CSWO மதிப்பாய்வு செய்து, எட்டு (8) வாரங்களுக்குள் ஒப்புதல் நிலையுடன் பதிலளிக்கும். அனைத்து ஒப்புதல்களும் CSWO உடனான ஒரு சந்திப்பின் மூலம் விவாதிக்கப்பட்டு வழங்கப்படும். தொடர்புக்கான வேறு விதம் எதுவும் பற்றிக் குறிப்பிட்டுக் கூறினால் அல்லது அல்லது கோரப்பட்டால் தவிர, CSWO விண்ணப்பதாரர்களுடன் மின்னஞ்சல் மூலமே தொடர்பு கொள்ளும். |
| **4** | **இணைப்பு நிலைக்காக CSWO உடன் ஒரு சந்திப்பு.** |
| | வெற்றிகரமான விண்ணப்பதாரர்களை CSWO அணுகி அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கென ஒரு சந்திப்பினைத் திட்டமிடும். |
| | அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் இணைப்பு பற்றிய அந்தஸ்தைப் பெற்றவுடன், உரிய பலன்களை அவர்கள் பயன்படுத்தத் தொடங்கலாம். |
| **5** | **பராமரிப்பு மற்றும் மீள்பார்வை** |
| | CSWO வருட முடிவு அறிக்கை வடிவுருவைப் பின்பற்றி, செயல்பாடுகள், கூட்டங்கள், நிதி மற்றும் திட்டங்கள் குறித்து, அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் CSWO க்கு மீண்டும் அறிக்கை அளிக்க வேண்டும். |
| | இணைக்கப்பட்ட அந்தஸ்தைப் புதுப்பித்தல் என்பது வருடாந்திர அடிப்படையில் அவசியமாகிறது. புதுப்பித்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக முழு விண்ணப்பப் படிவம் தேவையில்லை என்றாலும்கூட, மேலே பட்டியலிடப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பாக CSWO பிரதிநிதி அக்கம்பக்கத்தவர் சங்கத் தலைமையை அணுகுவார். |
| | CSWO ஆனது, அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் செயல்பாடுகள், கூட்டங்கள், நிதி மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் மதிப்பாய்வின் அடிப்படையில் புதுப்பித்தலுக்கான ஒப்புதல்களை வழங்கும். கூடுதலாக, அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்பு ஒப்பந்தம் மற்றும் ஒன்ட்டாரியோ மனித உரிமைகள் விதிமுறை தொடர்பான புகார்களையும் CSWO பரிசீலிக்கும். நகரத்துடன் இணைய விழையும் இந்தச் செயல்முறை ஒருபோதும் இப்படி சுலபமாக இருந்ததில்லை. |

**குறிப்பு:** இணைப்புக்கான விண்ணப்பங்களும் அதற்கான நிதியுதவியும் நகராட்சித் தேர்தல் நடைபெறும் ஆண்டில் ஏற்படும் மாற்றங்களுக்கு உட்பட்டது. நகராட்சி தேர்தல் தேதி முடியும் வரையும் அல்லது அதற்குப் பின்னரும் நிதிவழங்கல் மற்றும் செயல்பாடுகள் இடைநிறுத்தப்படலாம்.

## D அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்பு செயல்பாட்டில் நகர நிர்வாகத்தின் பங்கு என்ன?

பிராம்ப்டன் நகர நிர்வாகம், CSWO மூலம் இந்த வழிகாட்டி ஏட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதன் மூலம் அனைத்து அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கும் ஆதரவளிக்கும்.

CSWO வின் மூலமாக, பிராம்ப்டன் நகரின் அக்கம் பக்கத்தவர் சங்கங்களுடனான உறவுமுறையானது, ஆதரவளித்தல் மற்றும் வழிகாட்டுவதாகும். அக்கம்பக்கத்தவர் சங்கங்களின் வெற்றியானது அதன் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பைப் பொறுத்தது. அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கு தேவைப்படும்போது வழிகாட்டுதல்களை வழங்கி ஆதரவளிப்பதே CSWO இன் பங்கு ஆகும்; மேலும் அக்கம்பக்கத்தவர் சங்கங்களின் வளர்ச்சி, செழிப்பு மற்றும் தொடர்ந்து வளரும் திறனில் அவர்களுக்கு உதவுவதுவாகும். சங்கம் வலுவடையுமானால், அது சேவை செய்யும் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை அதிகரிப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எந்தவொரு அக்கம்பக்கத்தவர் சங்கமோ அல்லது அதன் உறுப்பினர்களோ எடுக்கும் முடிவுகள் மற்றும்/அல்லது செயல்களுக்கு நகர நிர்வாகம் பொறுப்பாகாது.

## E இணைவதற்கான ஒப்புதல் நிலை

நகரின் மற்ற பிரிவுகளுடன் கலந்தாலோசித்து, இணைப்பு நிலைக்கான விண்ணப்பங்கள் CSWO வினால் அங்கீகரிக்கப்படும். ஒப்புதல் வழங்குவதற்கான காலம், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து எட்டு (8) வாரங்கள் வரை ஆகலாம்.

ஒப்புதலின் பேரில், அனைத்து இணைக்கப்பட்ட குழுக்களும் CSWO உடன் அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட CSWO வைச் சந்திக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒவ்வொரு அக்கம்பக்கத்தவர் சங்கமும் இந்த வழிகாட்டி ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சம் ஒரு (1) வருடத்திற்கு இணைப்பு நிலைக்கான ஒப்புதல்கள் வழங்கப்படும். இணைக்கப்பட்ட குழுக்கள் தங்கள் நிலையைத் தொடர்வதற்காக புதுப்பித்தல் செயல்முறையின் மூலம் CSWO உடன் ஈடுபாடு கொள்ள வேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒப்புதல் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் ஏதும் கிடையாது.

# F ஒப்புதல் நிலையை முடிவுக்குக் கொண்டுவருதல்

அக்கம்பக்கத்தவர் சங்கம் கீழ்கண்டவாறு இருப்பின் இணைப்பு நிலை CSWO ஆல் ரத்துசெய்யப்படும், மற்றும் உதவிக்கான எதிர்கால கோரிக்கைகள் நிராகரிக்கப்படலாம்:

- இணைப்பு மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் சலுகைகளை துஷ்பிரயோகம் செய்தால்,
- நிதி வகையில், பொறுப்பான முறையில் செயல்படத் தவறினால்,
- ஒன்ட்டாரியோ மனித உரிமைகள் விதிகளுக்கு இணங்கத் தவறினால், மற்றும்/அல்லது
- அக்கம்பக்கத்தவர் சங்க ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் செயல்பட்டால்.

இணைக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் ஒன்ட்டாறியோ மனித உரிமைகள் விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். விதிமுறைகளின் கீழ் தடைசெய்யப்பட்ட காரணங்களில் அடங்குபவை, இனம், வம்சாவளி, பிறப்பிடம், இன மூலம், குடியுரிமை, பாலியல் நோக்குநிலை, பாலினம், ஆண்/பெண் அடையாளம், பாலின வெளிப்பாடு, மாற்றுத்திறன், நிறம், மதம், வயது, திருமண நிலை, குடும்ப நிலை, பழிவாங்கல், பொது உதவி பெறுதல் (வீட்டு வசதி பெறுவதில்), குற்றங்களின் பதிவு (வேலையில்) மற்றும் சங்கம் காரணமாக பாகுபாடு ஆகியனவாகும்.

முன்னதாகப் பட்டியலிடப்பட்டு தடைசெய்யப்பட்ட நடத்தையானது, இணைந்த அக்கம்பக்க சங்கத்தின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டால், இணைப்பு நிலை மதிப்பாய்வு செய்யப்பட்டு CSWO ஆல் சாத்தியமாகவே ரத்துசெய்யப்படலாம். அத்தகைய நடத்தைகள் பற்றி தொடர்புடைய CSWO தொடர்புநபர் மற்றும்/அல்லது CSWO நிர்வாகத்திடம் புகார் செய்யப்படலாம்.

CSWO தடைசெய்யப்பட்ட நடத்தை பற்றிய புகார்களை மதிப்பாய்வு செய்வதிலும், புகார்தாரரை சிறந்த முறையில் பாதுகாக்கும் விதத்தில் அதைச் செய்வதிலும் கடமைப்பட்டுள்ளது. CSWO ஆனது, தடைசெய்யப்பட்ட நடத்தை பற்றிய புகார்களுக்கு பல்வேறு அளவிலான நடவடிக்கைகளுடன் பதிலளிக்க முடியும், இதில் எச்சரிக்கைகளை வழங்குதல் மற்றும் இணைந்த நிலையை முடிவுக்கு கொண்டு வருதல் ஆகியவை உள்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாதனவும் அடங்கும். ஒப்பந்தத்தின் பேரில் முரண்படும் உறுப்பினர் தொடர்பாக ஆதரவு தர விரும்பும் அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் CSWOஐத் தொடர்பு கொள்ளலாம்.

அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் எந்த நேரத்திலும் இணைந்த நிலையை முடிவுக்குக் கொண்டு வரலாம். இணைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கோரிக்கைகள் CSWO க்கு எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் (CSWO@brampton.ca வழியாக) மற்றும் குழுவின் முக்கிய தொடர்பு நபரால் கையொப்பமிடப்பட வேண்டும்.




# பாகம் நான்கு

# மக்களை இணைத்தல்

பிராம்டனின் அக்கம்பக்கச் சுற்றுப்புறங்கள் பன்முகத்தன்மை மற்றும் கலாச்சாரம் செறிந்தவையாகும். அக்கம்பக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான சங்கங்களை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் உறுதிசெய்வது இன்றியமையாதது. இதை அடைய, அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கான உறுப்பினர் ஆட்சேர்ப்பு உத்தியானது, அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதுடன் கீழ்க்கண்ட பல்வேறு காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்:

| ✓ | கருத்தில் கொள்ளவேண்டியவை |
|---|---|
| | குடும்ப வகை |
| | கலாச்சாரம் மற்றும் மதம் |
| | வயது வரம்புகள் |
| | மொழிகள் |
| | இயல்திறன்கள் |
| | பாலினம் மற்றும்/அல்லது பாலின |
| | அடையாளம் |

*"எனது அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தில் ஒரு அக்கம்பக்கத்தவர் சங்கத்திற்கான தேவை உள்ளது, ஏனெனில் அண்டை வீட்டார் எவரும் இணைக்கப்படவில்லை மற்றும் யாரும் சொந்தம் என்ற உணர்வை கொண்டிருக்கவில்லை."*

- குடியிருப்புவாசி, அக்கபக்கத்தவர்களை வளர்ப்பதற்கான திட்ட கருத்தாய்வு

# A எப்படித் துவக்குவது!

அக்கம்பக்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ளவும் அக்கம்பக்கத்தவர் சங்கம் ஒன்றைத் துவக்குவதற்கும், பின்வரும் உபயோகரமான குறிப்புகளைப் பின்பற்றவும்:

| ✓ | படிகள் |
|---|---|
| **1** | **உங்கள் அண்டைவீட்டாரைச் சந்திக்கவும்** |
| | உங்கள் அண்டைவீட்டாரை பரிச்சயம் செய்துகொள்ளவும்! |
| | அக்கம்பக்கத்தில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான பொதுவான ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அண்டை வீட்டார்கள் கொண்ட குழுவை ஒன்றுதிரட்டுங்கள். |
| | உங்கள் பகுதியில் தற்போது அக்கம்பக்கத்தவர் சங்கம் ஏதேனும் உள்ளதா என விசாரிக்க CSWOஐத் தொடர்பு கொள்ளவும் |
| **2** | **குழுவினர் கலந்துரையாடல் ஒன்றைத் துவக்கவும்** |
| | இலவசமாகக் கிடைக்கின்ற ஆன்லைன் சமூக/டிஜிட்டல் தளங்களில் மெய்நிகர் குழு கலந்துரையாடலைத் தொடங்கவும். உதவி மற்றும் யோசனைகளுக்கு, CSWO வை (CSWO@brampton.ca) இல் தொடர்பு கொள்ளவும். |
| | அருகிலுள்ள சமூக பூங்கா அல்லது நடைபாதையில் நேரில் சந்தித்தபடியான உரையாடலைத் தொடங்கவும். |
| | தகவல்தொடர்பு முறை(கள்) தொழில்நுட்பத்திற்கான மாறுபட்ட அணுகல் உள்ளவர்களை உள்ளடக்கியதாகவும் மற்றும் மொழித் தடைகள் இல்லாததாகவும் இருப்பதை உறுதிப்படுத்தவும். |
| | அரட்டையடிக்கச் சாத்தியமான தலைப்புகள்: பாதுகாப்பு, அழகுபடுத்துதல், இணைந்தபடியே இருத்தல், ஆதாரவளங்களை அணுகுதல். |

| ✓ | படிகள் |
|---|---|
| **3** | **முறைப்படுத்தவும்** |
| | இதுவரை ஈடுபட்டுள்ள அக்கம்பக்கத்தவர்கள் கொண்ட குழுவை வைத்து முறைப்படியான அக்கம்பக்கத்தவர் சங்கத்தை நிறுவும். |
| | *குழுவிற்கு பெயரைத் தேர்ந்தெடுக்கவும், எடுத்துக்காட்டாக: உங்கள் "தெரு பெயர்/அக்கம்பக்கத்தில் உபயோகிக்கின்ற பெயரில் சங்கத்தின் பெயர்."* |
| | CSWO ஊழியர்களுடன் சேர்ந்து உங்கள் புவியியல் எல்லையை அடையாளம் கண்டு, இறுதி செய்யவும். |
| | அளவுருக்கள், வழிகாட்டுதல்கள், மக்கள்கலவை மற்றும் தகவல்தொடர்பு விதிகளை நிறுவவும் |
| **4** | **அக்கம்பக்கத்தவர்களுடன் சேர்ந்து நடந்து செல்லவும்** |
| | நீங்கள் விரும்புவதைப் பற்றியும், எதை மேம்படுத்த விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றியும் அரட்டையடிக்க, அக்கம்பக்கத்தினருடன் உங்கள் சுற்றுப்புறத்தில் சிறிது தூரம் நடந்து செல்லுங்கள். |
| | இலக்குகள், முன்னுரிமைகள் மற்றும் அக்கம்பக்கத்துக்கான ஒட்டுமொத்த தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றை நிறுவவும். |
| | அக்கம்பக்கத்தவர் சொத்துக்களை அடையாளம் காணவும். |
| **5** | **தொடர்ந்து உரையாடியபடியே இருக்கவும்** |
| | காலக்கெடு, வடிவுரு மற்றும் கூட்டங்கள் உட்பட, அக்கம்பக்கத்தவர் சங்கத்திற்கான கட்டமைப்பைத் தீர்மானிக்கவும். |
| | எதிர்கால திட்டங்கள் மற்றும் முடிவுகளில் உங்கள் குழுவினர் விரும்பும் வகையிலான வாக்களிப்பு முறையைக் கண்டறியவும். ஒரு வாக்கெடுப்புக்கு ஒரு கணிசமான எண்ணிக்கை அல்லது குறைந்தபட்ச எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருப்பது மற்றும் குழுவின் ஒட்டுமொத்த விருப்பங்களைத் தீர்மானிக்க 50% +1 வாக்களிப்பு வரம்பைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ள CSWO பரிந்துரைக்கிறது. இந்த முறையானது, வாக்கு செலுத்த வருகை புரிவதைக் கட்டாயப்படுத்துவது போன்ற தேவையற்ற சுமையை உறுப்பினர்கள் மீது ஏற்படுத்தாமலேயே, அக்கம் பக்கத்தினரின் ஒருமித்த தேவைகள் மற்றும் விருப்பங்கள் இன்னவைதான் என்று நிரூபிப்பதை மட்டுமே எடுத்தியம்புகிறது. |
| | சந்திப்புக்கூட்டம்/தகவல்தொடர்புக்கான அடிக்கடித்தன்மையைத் தீர்மானிக்கவும். |
| | குழுவாக இருந்தபடி அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளைப் பற்றியே, தொடர்ந்து சந்தித்துப் பேசவும். |

# B உறுப்பினர்களை சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் வைப்பது எப்படி!

அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். பின்வரும் ஆலோசனைகள் குழுவை ஊக்கப்படுத்தி அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் செயல்பாடுகளில் அவர்களின் சீரான தொடர்ந்த பங்கேற்பைப் பேணி வரலாம்:

| ✓ | படிகள் |
|---|---|
| **1** | **கட்டுமானத்தை நிலைநாட்டவும்** |
| | உறுப்பினர் தேவைகள், சுற்றுப்புற எல்லைகள், நிர்வாகம், பணி, தொலைநோக்குப்பார்வை மற்றும் மதிப்புகளுக்கான கட்டமைப்பை வரையறுத்து நிறுவவும். |
| **2** | **தகவல் தொடர்புக்கான வழி(கள்)ஐ நிலைநாட்டவும்** |
| | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் (அதாவது செய்தித்தாள் அல்லது சமூக/டிஜிட்டல் தளங்கள்) வழக்கமாக உறுப்பினர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்யவும் |
| **3** | **பொதுவான விருப்பங்கள்/பிரச்சனைகளைப் பற்றிக் கலந்துரையாடவும்** |
| | ஒன்றுசேருங்கள் மற்றும், சிக்கலைத் தீர்க்க ஒத்துழையுங்கள் அல்லது பாதுகாப்பு, ஆதாரவளங்களை அணுகுதல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் போன்ற அக்கம்பக்கத்தில் உள்ள பொதுவான விருப்பங்கள் அல்லது சிக்கல்களுக்கு தீர்வு காணுங்கள் அல்லது அறிந்திருங்கள். |
| **4** | **கூட்டங்களை சீராக நடத்தி வரவும்** |
| | அனைத்து உறுப்பினர்களுக்கும் வசதியான மற்றும் அணுகக்கூடிய வகையில் பொருத்தமான இடத்தை முன்பதிவு செய்யவும். சந்திப்பை அதன் போக்கில் தொடர ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கவும். விவாதங்களை வழிநடத்த ஒரு உறுப்பினரை நியமிக்கவும். பொறுப்புக்கூறலுக்காக சந்திப்பின்போதான விவாதங்களின் குறிப்புகள், செயல் விஷயங்கள், முடிவுகள் மேற்கொள்ளுதல் மற்றும் பலன்விளைவுகளைப் பகிரவும். அனைத்து சந்திப்பு தகவல்தொடர்புகளும் வெளிப்படையானதாகவும் அனைவருக்கும் அணுகக்கூடியதாகவும் இருப்பதை உறுதிசெய்யவும். |
| **5** | **முக்கிய முடிவுகள் மற்றும் திட்டப்பணிகளுக்கு வாக்களிக்கவும்** |
| | குழு மேற்கொண்டு தொடர விரும்பும் முக்கிய முடிவுகள் மற்றும் திட்டப்பணிகளுக்காக வாக்களிப்பதன் மூலம் உறுப்பினர்களை ஈடுபடுத்துங்கள். இது அனைத்து முடிவுகளிலும் சமூகத்தினரின் குரல் ஒலிப்பதை உறுதிசெய்கிறது மற்றும் அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் செயல்பாடுகளில் தனது என்ற சொந்தம் கொள்ளும் உணர்வை அதிகரிக்க உதவுகிறது. |
| **6** | **Hold regular events** |
| | அக்கம்பக்கத்தில் உள்ள சமூகக் கூட்டங்கள், சுற்றுப்பயணங்கள் மற்றும் நடைபயணங்கள் மற்றும் உங்கள் அண்டை வீட்டாரைச் சந்தித்து பழகுவதற்கான பிற வேடிக்கையான வாய்ப்புகள் போன்ற நிகழ்வுகளைத் திட்டமிட்டு, கலந்துகொள்வதன் மூலம் உறுப்பினர்களை ஈடுபடுத்துங்கள். |



COMMUNITY SAFETY
& WELL-BEING

# பாகம் ஐந்து

# நடவடிக்கை எடுத்தல்

நமது அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களை சிறப்பாக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் முயற்சிகளில் அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கு நகரம் ஆதரவளிக்கிறது. CSWO இன் முக்கிய குறிக்கோளாக இருப்பது, ஆதாரவளங்கள், கருவிகள் மற்றும் செயல்முறைக்கான ஆதரவை வழங்குதல் மற்றும் குடியிருப்புவாசிகள் தங்கள் அக்கம்பக்கத்துச் சுற்றுப்புறங்களில் மகத்தான விஷயங்களைச் செய்வதை முடிந்தவரை எளிதாக்குதல் ஆகியனவாகும்.

அக்கம்பக்கத்தவர் சங்கத் திட்டப்பணியைத் தொடங்குவதற்கு உதவி தேவையா? பயனுள்ள இந்த சரிபார்ப்பு பட்டியலைப் பின்பற்றவும்:

| ✓ | பணிகள் |
|---|---|
| | உங்கள் அக்கம்பக்கத்திற்கான ஒரு திட்டப்பணி பற்றி தீர்க்கமாக சிந்தியுங்கள்! பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் ஒரு திட்டப்பணியே இலக்காக இருக்க வேண்டும். |
| | உங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்திற்கு உள்ளாகவே செயல்பாட்டிற்கு உத்வேகம் அளிப்பதற்காக வேலை செய்யவும், மற்றும் திட்டப்பணியை நகர்த்தியபடி இருக்கவும், திட்டத்தை வழிநடத்த அல்லது ஆதரிக்கத் தயாராக உள்ளவர்களை அடையாளம் காணவும். |
| | திட்டப்பணிக்கான வரவு செலவு திட்டத்தை உருவாக்கவும். பொருட்கள் அல்லது உபகரணங்களுக்கான மதிப்பீடுகள் உட்பட திட்டப்பணிக்கான செலவு என்னவெனத் தீர்மானிக்கவும். |
| | இணைப்பு பெறுவதற்கான உங்கள் உங்கள் திட்டப்பணி விவரங்கள் மற்றும் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்தை CSWO வில் சமர்ப்பிக்கவும். தொடர்புடைய செலவுகள் உள்ளிட்ட நிதி விவரங்கள் இதில் இருக்க வேண்டும். |
| | நிகழ்த்திக்காட்டவும்! |
| | திட்டப்பணி நிறைவுற்றதும் CSWO மற்றும் BCSAC க்கு மீண்டும் தெரிவிக்கவும். கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் அல்லது பிற தொடர்புடைய செலவுகள் தொடர்பான விவரங்களையும் சேர்க்கவும். |

# A வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான மானியத்தை நகர நிர்வாகத்திடமிருந்து பெறும் வாய்ப்புக்கள்

2024 பட்ஜெட் செயல்முறை மூலம் ஒதுக்கப்படும் நிதியுடன், உள்ளூர் அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கு ஆதரவளிப்பதற்கான நிதி ஆதரவு CSWO மூலம் வழங்கப்படும்.

பிராம்ப்டனில் உள்ள அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் இணைப்புக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு கொண்டிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்டதும், அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் திட்டங்கள்/முன்முயற்சிகளுக்கு அக்கம்பக்கத்தவர் சங்க வழிகாட்டி திட்டப் பட்டியலிலிருந்து $1,500 வரை வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான மானியம் மூலம் CSWO நிதியளிக்கும்:

- நகர் மன்ற மேற்கு அடுக்கு மாடிக் கட்டித்தில் (2வது மற்றும் 3வது தளம்) நகர நிர்வாகத்திற்கு சொந்தமான போர்டுரூம் இடம்.
- பொது இடத்தை அழகுபடுத்துதல், தூய்மையான தன்மை மற்றும் அக்கம் பக்கத்தவர் சொத்துக்களை பராமரிப்பதில் செயலூக்கமான அணுகுமுறைகளை மேற்கொள்வது தொடர்பான திட்டங்கள்.
- தெருக்களில் விருந்துபசாரம் மற்றும் பார்பிக்யூக்கள் போன்ற நிகழ்வுகள் மூலம், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு சொந்தம் கொள்ளும் உணர்வை அதிகரிப்பது தொடர்பான திட்டங்கள்.

வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான மானியத்தை அணுக CSWO வின் வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும், இதில் விண்ணப்பதாரர்களிடம் இவை எதிர்பார்க்கப்படுகின்றன:

| ✓ | தேவைப்பாடுகள் |
| --- | --- |
| | பலன்கள் மற்றும் அளவீடுகளைக் கோடிட்டுக் காட்டவும் |
| | சமுதாயப் பாதுகாப்புக்கான செயல் திட்டத்துடன் திட்டப்பணி(கள்), கூட்ட(ம்) ங்கள், அல்லது நிகழ்வு(கள்) ஆகியவற்றை ஒருமிக்கச் செய்யவும். |
| | விளைபலன்கள் மற்றும் செலவினங்கள் பற்றி CSWO மற்றும் BCSAC க்கு மீண்டும் அறிக்கை தரவும் |

# B வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான மானியத்தின் சாத்தியமான பயன்கள்

வெற்றிகரமாக இணைக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்க விண்ணப்பதாரர்கள் CSWO மூலம் கிடைக்கின்ற, வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் மானியத்தை சமூக பாதுகாப்பு செயல்திட்டம் தொடர்பான பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள், இதில், கவனம் செலுத்தும் பகுதிகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தொடர்புடைய திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- *பாதுகாப்பு:* பாதுகாப்பு மற்றும் உள்ளூர் அழகுபடுத்தலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் செயல்படுத்துதல். பார்வைக்கு ஈர்க்கும்படியான அக்கம்பக்கச் சுற்றுப்புறமானது தனி ஒருவரின் ஒட்டுமொத்த தன்னுணர்வையும், அக்கம் பக்க முயற்சிகளில் பங்கேற்பதில் அவரின் ஆர்வத்தையும் மேம்படுத்துகிறது.

- *விழிப்புணர்வு:* அக்கம்பக்கச் சுற்றுப்புற நிகழ்வுகள், கூட்டங்கள் மற்றும்/அல்லது நடைபயணங்களை ஒழுங்கமைத்து நடத்துதல்; இது அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களுக்கான தொலைநோக்குப்பார்வை மற்றும் இலக்குகளைப் பற்றி விவாதிக்கவும் மற்றும் ஆதாரவளங்கள் மற்றும் தகவல்களுடன் மக்களை இணைக்க உதவும்.

- *அதிகாரமளித்தல்:* அக்கம்பக்கத்தில் உள்ளவர்களைப் போற்றி வளர்த்தல் மற்றும் காலி இடங்களை பயனுள்ள அமைவிடங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.

பாதுகாப்பு, விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளித்தல் பகுதிகளுக்குள் வரக்கூடிய சாத்தியமான திட்டங்கள் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன:

| ✓ | திட்டப்பணி | விவரிப்பு | கருத்துரு | கிடைக்கின்ற நிதி |
|---|---|---|---|---|
| | குப்பைகள் அகற்றுதல் | பூங்காக்கள், பாதைகள், பள்ளிகள் மற்றும் பிற பொது இடங்களிலும் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குப்பைகளை எடுக்க, சுற்றுப்புறங்களில் தூய்மைப்படுத்தும் நிகழ்வை ஏற்பாடு செய்யுங்கள். நகரின் பூங்காக்களைத் தூய்மைப்படுத்தும் திட்டம் பற்றிய கூடுதல் தகவல்கள் ஆன்லைனில் கிடைக்கின்றன. | அழகுபடுத்தல் | **$1,500** வரை |
| | சுவர் விளம்பரங்கள்/ கிறுக்கல்கள் அகற்றுதல் | சுற்றுப்புறத்தில் சுவர் விளம்பரங்கள்/ கிறுக்கல்கள் அகற்றப்பட வேண்டிய பகுதிகளை அடையாளம் காணவும். சுவர் விளம்பரங்கள் அகற்றுதல் நடவடிக்கைகள்/ மீண்டும் ஓவியம் வரைதல்/சுத்தம் செய்தல் ஆகியவற்றில் பங்கேற்கவும். ஒரு பராமரிப்பு திட்டத்தை உருவாக்கவும்.<br>இந்த திட்டத்தை நிறைவேற்றும் முன்னதாக, பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு ஆகியவை என்னவென CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகர அலுவல் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும் | அழகுபடுத்தல் | **$1,500** வரை |
| | பொது இடங்களில் பூந்தொட்டிகள் | சுற்றுப்புறத்தில் உள்ள பொது இடங்களைக் கண்டறிந்து, பூந்தொட்டிகளை வைத்து பராமரிப்பதற்கான திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துதல்<br>இந்த திட்டத்தின் சாத்தியப்படும் தன்மையை ஆய்வு செய்வதற்காக, பிராம்ப்டன் நகர பூங்கா பராமரிப்பு மற்றும் வனவியல் பிரிவினருடன் ஆலோசனை செய்யப்பட வேண்டும் மற்றும் நடைமுறைக்கு கொண்டுவருவது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. | அழகுபடுத்தல் | **$1,500** வரை |
| | போக்குவரத்தினை அமைதிப்படுத்தும் வகையில் பூந்தொட்டிகள் (நில எழில் செய்யப்பட்ட சாலை மத்திம திட்டுகள் | பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, இயற்பியல் வடிவமைப்பு பொருட்களாக பூந்தொட்டிகள் அல்லது நிலப்பரப்பு சாலை மத்திம திட்டுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அருகிலுள்ள உள்ளூர் சாலைகள் எவை என அடையாளம் காணவும். இந்த திட்டத்தின், சாத்தியப்படும் தன்மையை ஆய்வு செய்வதற்காக, பிராம்ப்டன் நகர பூங்கா பராமரிப்பு மற்றும் வனவியல் பிரிவினருடன் ஆலோசனை செய்யப்பட வேண்டும் மற்றும் நடைமுறைக்கு கொண்டுவருவது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. | பாதுகாப்பு | **Up to $1,500** |





| ✓ | திட்டப்பணி | விவரிப்பு | கருத்துரு | கிடைக்கின்ற நிதி |
|---|---|---|---|---|
| | பொதுமக்கள் உட்காரும் பலகைகளை அர்ப்பணித்தல் | அக்கம்பக்கத்தில் பொதுமக்கள் உட்காரும் வகையில் பலகைகளை அமைக்கக்கூடிய பகுதிகளை அடையாளம் காணவும். உட்காரும் பலகைகளை அர்ப்பணித்தல் பற்றிய மேலும் தகவல்கள் ஆன்லைனில் கிடைக்கின்றன | இடம் அமைத்தல் | $1,500 வரை |
| | ஓவியம் தீட்டப்பட்ட குப்பைத் தொட்டிகள் | குப்பைத் தொட்டிகள் மீது ஓவியம் தீட்ட உள்ளூர் ஓவியக்கலைஞர்களுடன் கூட்டு சேர்ந்து அக்கம்பக்கத்தவரால் வழி நடத்தப்படும் திட்டப்பணியை மேற்கொள்வதன் மூலம் குப்பைத்தொட்டிகளை உபயோகிப்பது மற்றும் குப்பைகள் சிதறவிடுவதை மனதளவில் தடுத்தல்.<br>இந்த திட்டத்தை நிறைவேற்றும் முன்னதாக, பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு ஆகியவை என்னவென CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகர அலுவல் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும்; இதில் நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதம் கிடையாது | அழகுபடுத்தல் | $1,500 வரை |
| | தகவல் பலகைகள் | அக்கம்பக்கச் சுற்றுப்புறம் பற்றியத் தகவல்/ ஆதாரவளம் அறிவிப்புப் பலகைகளுக்கான பகுதிகளைக் கண்டறிந்து, தகவல் அறிவிப்பு செய்து குப்பைகளைத் தவிர்ப்பதற்கான பராமரிப்புத் திட்டம். | இடம் அமைத்தல் | $1,500 வரை |
| | ஆங்காங்கே நூலகங்கள் | ஆங்காங்கே நூலகங்கள் அமைப்பதற்கான பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் வளப்படுத்துதல்.<br>இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகரப் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும். | இடம் அமைத்தல் | $1,500 வரை |
| | ஆங்காங்கே சந்தைகள் | ஆங்காங்கே சந்தைகள் அமைப்பதற்கான பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் வளப்படுத்துதல்.<br>இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகரப் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும். | இடம் அமைத்தல் | $1,500 வரை |

| ✓ | திட்டப்பணி | விவரிப்பு | கருத்துரு | கிடைக்கின்ற நிதி |
| --- | --- | --- | --- | --- |
| | ஒரு பூங்காவைத் தத்தெடுக்கவும் | திறந்தவெளியைப் பராமரிக்க, அழகுபடுத்த, மேம்படுத்த மற்றும் பூங்காவை அனைவரும் ரசிக்கும்படி பாதுகாப்பாக வைத்திருக்க உதவுவதன் மூலம், தன்னார்வத் தொண்டர்கள், நகரப் பூங்காவிற்கு சிறப்புப் பராமரிப்பு அளிக்க தங்கள் நேரத்தையும் வளங்களையும் வழங்கலாம். ஒரு பூங்காவைத் தத்தெடுப்பதன் மூலம், தன்னார்வத் தொண்டர்கள் குழு இரண்டு வருட தத்தெடுப்பு காலத்தில் ஆறு (6) முன்னெடுப்பு நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகளை நடத்த உறுதிமொழி எடுக்கிறார்கள். மேலும் தகவல்கள் ஆன்லைனில் கிடைக்கின்றன. | சொந்தம் எனும் உணர்வு | **$1,500** வரை |
| | அக்கம்பக்கத்தவர் நுழைவாயிலில் பூச்செடிகளால் ஆன விரிப்புகள் | அக்கம்பக்கத்தவர் நுழைவாயிலில் பூச்செடிகளால் ஆன விரிப்புகள் வடிவமைப்பு மற்றும் நடவுகளை ஆதரித்தல் அல்லது வழிநடத்துதல். 311 சேவைக் கோரிக்கையைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, இந்த திட்டம் நகரின் பூங்கா பராமரிப்பு மற்றும் வனவியல் பிரிவால் மதிப்பிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | அழகுபடுத்தல் | **$1,500** வரை |
| | வழிகாட்டும் அறிவிப்புப் பலகை | வழி காட்டுகின்ற புதிய அல்லது கூடுதல் அறிவிப்புப் பலகைகள் அக்கம்பக்கத்தில் தேவைப்படக்கூடிய பகுதிகளை அடையாளம் காணவும். இந்தத் திட்டம் சாத்தியமான ஆய்வுக்காக பொருந்தக்கூடிய நகரத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் மற்றும் நடைமுறைப்படுத்துவார்கள் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. | இடம் அமைத்தல் | **$1,500** வரை |



| ✓ | திட்டப்பணி | விவரிப்பு | கருத்துரு | கிடைக்கின்ற நிதி |
|---|---|---|---|---|
| | ஓவியம் தீட்டப்பட்ட வழித்தடங்கள் | அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தினுள் இருக்கும் வழித்தடங்களில் ஓவியம் வரைந்து அழகுபடுத்துவதற்கும், அக்கம்பக்கம் மீது சொந்தம் கொள்ளும் உணர்வை உருவாக்குவதற்கும், அக்கம் பக்கத்தினரால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு உள்ளூர் ஓவியக் கலைஞர்களுடன் கூட்டு சேருங்கள்.<br>இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகரப் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும் மற்றும் நடைமுறைப்படுத்துவார்கள் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. | இடம் அமைத்தல் | $1,500 வரை |
| | பல்நோக்கு கேளிக்கை மைதானங்களை அழகுபடுத்துதல் | அக்கம்பக்கத்தவர் நடத்திவரும் பல்நோக்கு கேளிக்கை மைதானங்களை அழகுபடுத்த உள்ளூர் ஓவியக்கலைஞர்களுடன் கூட்டு சேருங்கள்.<br>இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், பொருத்தமான பொருட்கள் மற்றும் பராமரிப்பு CSWO மற்றும் பொருந்தக்கூடிய நகரப் பிரிவுகளுடன் தீர்மானிக்கப்பட வேண்டும் மற்றும் நடைமுறைப்படுத்துவார்கள் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. | அழகுபடுத்தல் | $1,500 வரை |
| | தெருக்களில் விருந்துபச்சாரம் | உங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்துடன் சேர்ந்து ஒரு தெரு விருந்தை திட்டமிட்டு நடத்துங்கள். அக்கம்பக்கத்தினர் தமக்குச் சொந்தம் என்ற உணர்வை உருவாக்க, அனைவரையும் உள்ளடக்கிய செயல்பாடுகள் மற்றும் 'உங்களைப் பற்றி தெரிந்துகொள்வது' போன்ற வேடிக்கையான விளையாட்டுகளைச் சேர்க்கவும்.<br>இந்தத் திட்டப்பணிக்கு உரிய அனுமதிகளைப் பெறவேண்டும் மற்றும் நகர நிர்வாகத்துறையினரின் ஆலோசனை பெறப்படவேண்டும். | சொந்தம் எனும் உணர்வு | $1,500 வரை |
| | தெருக்களில் உணவை சுட்டு சாப்பிடுதல் | உங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்துடன் சேர்ந்து தெருக்களில் உணவை சாப்பிடக்கூடிய பார்பிக்யூவைத் திட்டமிட்டு நடத்துங்கள். அக்கம்பக்கத்தினருக்குள் சொந்தம் என்ற உணர்வை உருவாக்க, அனைவரையும் உள்ளடக்கிய செயல்பாடுகள் மற்றும் 'உங்களைப் பற்றி தெரிந்துகொள்வது' போன்ற வேடிக்கையான விளையாட்டுகளைச் சேர்க்கவும்.<br>இந்தத் திட்டப்பணிக்கு உரிய அனுமதிகளைப் பெறவேண்டும் மற்றும் நகர நிர்வாகத்துறையினரின் ஆலோசனை பெறப்படவேண்டும். | சொந்தம் எனும் உணர்வு | $1,500 வரை |





| ✓ | திட்டப்பணி | விவரிப்பு | கருத்துரு | கிடைக்கின்ற நிதி |
|---|---|---|---|---|
| | இளைஞர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல் | சமூகத்தில் இளைஞர்களை ஈடுபாடு கொள்ளசெய்வதற்காக என்றே வடிவமைக்கப்பட்ட ஒரு திரைப்படம் அல்லது ‘விளையாட்டு இரவு’ போன்ற சமூகக் கூட்டத்தைத் திட்டமிட்டு பூங்காவில் நடத்தவும்.<br>இந்தத் திட்டப்பணிக்கு உரிய அனுமதிகளைப் பெறவேண்டும் மற்றும் நகர நிர்வாகத்துறையினரின் ஆலோசனை பெறப்படவேண்டும். | சொந்தம் எனும் உணர்வு | **$1,500** வரை |
| | காலியிடத்தை அணுகுதல் | அக்கம்பக்கத்தவர் சங்க நிகழ்வுகள், நிர்வாகக் கூட்டங்கள் அல்லது உறுப்பினர் சந்திப்புகளை நடத்துவதற்காக, பொழுதுபோக்கு மையங்களில் உள்ள சமுதாயக் கூடங்கள் அல்லது பூங்காக்கள் போன்ற நகராட்சி இடத்தை அணுகவும். | இணைந்த தன்மை | **$1,500** வரை |
| | நாய் மற்றும்/அல்லதுசெல்லப்பிராணிகள் தொடர்பான விருந்துபசாரங்கள் | நாய் மற்றும்/அல்லது செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களை இணைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு சமூகக் கூட்டத்தைத் திட்டமிட்டு நடத்தவும், அதாவது நாய் கண்காட்சி அல்லது செல்லப்பிராணி கண்காட்சி போன்றவை.<br>இந்தத் திட்டப்பணிக்கு உரிய அனுமதிகளைப் பெறவேண்டும் மற்றும் நகர நிர்வாகத்துறையினரின் ஆலோசனை பெறப்படவேண்டும். | சொந்தம் எனும் உணர்வு | **$1,500** வரை |
| | சமுதாயத்தினர் கூடிச்செய்யும் உடல் தகுதித்தன்மைக்கான நிகழ்ச்சிகள் | பூங்காக்களில் யோகா போன்ற சமூக உடற்பயிற்சி நிகழ்வுகளைத் திட்டமிட்டு அக்கம்பக்கத்தவர்களை இணைக்கவும்,மற்றும் உடல் பயிற்சி செய்ய ஊக்குவிக்கவும்.<br>இந்தத் திட்டப்பணிக்கு உரிய அனுமதிகளைப் பெறவேண்டும் மற்றும் நகர நிர்வாகத்துறையினரின் ஆலோசனை பெறப்படவேண்டும். | சொந்தம் எனும் உணர்வு | **$1,500** வரை |
| | கற்றுக்கொள்ளும் நிகழ்ச்சிகள் | உள்ளூர் பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய சமூகத்தின் அறிவை ஆழப்படுத்த, உள்ளூர் நிபுணர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் வாழ்ந்த/வாழ்கின்ற அனுபவத்துடன் சம்பந்தப்படும் கற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியாக ஒரு இரவு நேரத்தில் நடத்த திட்டமிடுங்கள். பேச்சாளர்களுக்கு கவுரவ பணமுடிப்பு வழங்கவும் நிதியை ஓரளவு பயன்படுத்த வேண்டும். | இணைந்த தன்மை | **$1,500** வரை |

**குறிப்பு:** மேலே உள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து சாத்தியமான திட்டங்களும் மாறக்கூடிய காலக்கெடுவைக் கொண்டுள்ளன. திட்டப்பணிக்குப் பொருந்தக்கூடிய காலக்கெடுவிற்கு CSWO உடன் தொடர்பு கொள்ளவும்.

## C ஒரு ஆண்டிற்கான திட்டப்பணிகளின் எண்ணிக்கை

இணைக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் தங்கள் அக்கம்பக்க சங்கத்தின் குறிப்பிட்ட புவியியல் எல்லைகளில் உள்ள திட்டங்களுக்கு வளர்த்தெடுக்கப்படும் அக்கம்பக்கத்தவர் மானியத்தினை அணுகுவதற்காக விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுகிறது, இதன் மொத்தத் தொகை $1,500 ஆகும்.

இணைக்கப்பட்ட அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் புவியியல் எல்லைகளுக்கு கூடுதல் திட்டப்பணிகள் செய்யத் தேவைப்பட்டால், அந்தந்தக் குழுவினர் ஆண்டுக்கு பல திட்டங்கள்/முயற்சிகளை செயல்படுத்துவதற்கான கூடுதல் விருப்பங்களுக்கு CSWO உடன் தொடர்பு கொள்ளலாம்.

ஒரே புவியியல் எல்லைக்குள்ளாக பல அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் ஒரே நேரத்தில் நிதியுதவிக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவதில்லை. அனைத்து விண்ணப்பங்களையும் பெற்று, வரம்புகளை மதிப்பாய்வு செய்து ஒரு கூட்டு முடிவை CSWO எடுக்கும்.

தற்போதுள்ள அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் CSWO உதவ முடியும் மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பரஸ்பர உரிமைகோரல் வழக்குகளை தீர்க்க உதவலாம்.

## D வெற்றிகரமான திட்டப்பணிகள்

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் தங்கள் திட்டங்கள் குறித்து CSWO மற்றும் BCSAC க்கு மீண்டும் அறிக்கை அளிக்க வேண்டும்; ஏனெனில், அக்கப்பக்கத்துச் சுற்றுப்புறத்தை அழகுபடுத்துதல் மற்றும் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கான ஒரு இயங்குமுறையாக, நிதி வழங்குவதற்கான நடைமுறை இருக்க வேண்டும் மற்றும் சமூகத்துடன் தங்கள் திட்டங்களைப் பகிர்ந்து கொள்ள CSWO குவாட்ரன்ட் (நான்கில் இரு பாகம்) இணைப்பு கூட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்கவும் அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

அழகுபடுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களில் அக்கம்பக்கத்தவர் சங்கத்தின் கூட்டு நடவடிக்கைகளின் விளைவாக, அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் ஏற்படும் தாக்கங்களை CSWO மதிப்பீடு செய்யும், மேலும் வளர்த்தெடுக்கப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான மானியம் கொடுப்பதன் வெற்றியைத் தீர்மானிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக பலன்கள் மற்றும் விளைவுகளை கண்காணிக்கும். இந்தச் செயல்முறையின் ஒரு பகுதியாக, CSWO, அக்கம்பக்கத்தவர் சங்கத்துடன் பின்தொடர்வு செய்யக்கூடும்.

*“அக்கம்பக்கத்தவர்களை அடிப்படையாகக் கொண்ட திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகள் அக்கம்பக்கத்தவர்களிடையே இணைப்பையும் சமூகத்தையும் உருவாக்க உதவும்; இது தனிநபர் நல்வாழ்வு, பாதுகாப்பு, பத்திரமாக இருத்தல் மற்றும் கொண்டாட்டங்கள் மற்றும் சிரமங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் திறன் ஆகியவற்றில் முக்கிய காரணியாக இருக்கும்.”*

- குடியிருப்புவாசி, வளர்த்தெடுக்கப்படும் அக்கம்பக்கத்தவர் பற்றிய கருத்தாய்வு



COMMUNITY SAFETY
& WELL-BEING

## பாகம் ஆறு

# அக்கம்பக்கத்தவர்களுக்கான செயல் திட்டம்

அக்கம்பக்கத்தவர்களுக்கான செயல்திட்டங்கள் மூலம், அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் வலுவான அக்கப்பக்கச் சுற்றுப்புறங்களை உருவாக்குவதற்கு அதிகாரம் பெறுகின்றனர்; இதில் அனைவரும் பாதுகாப்பாக உணர்கிறார்கள், சொந்தம் என்ற உணர்வு கொள்கிறார்கள், தகவல்கள் மற்றும் ஆதாரவளங்களுடன் இணைக்கப்படுகின்றனர்.

அக்கப்பக்கத்தவர்களுக்கான செயல் திட்டங்கள் ஆனவை, அக்கம்பக்கத்தவர் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணும்; அடையக்கூடிய செயல்பாடுகளுடன் அதன் குடியிருப்புவாசிகளால் அடையாளம் காணப்பட்ட அக்கம்பக்கத்தவருக்கான தொலைநோக்குப் பார்வையை எட்டிப்பிடிக்க இயலும்.

CSWO ஆனது அக்கம்பக்கத்தவருக்கான செயல் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் அக்கம்பக்கத்தவர் சங்கங்களை ஆதரிக்க முடியும். அக்கம்பக்கத்தவருக்கான செயல் திட்டங்களை பற்றிய ஒரு வடிவுருவைப் பெறுவதற்கு CSWO ஐத் தொடர்புகொள்ளவும்.

*“அக்கம்பக்கத்தவர்களுடன் நன்றாக பரிச்சயம் செய்துகொள்ள எங்களுக்கு உதவி செய்து பாதுகாப்பாக உணர்வீராக.”*

- குடியிருப்புவாசி, வளர்த்தெடுக்கப்படும் அக்கம்பக்கத்தவர் பற்றிய கருத்தாய்வு

# A அக்கம்பக்கத்தவருக்கான ஒருசெயல் திட்டத்தை ஏன் உருவாக்க வேண்டும்?

குடியிருப்பாளர்களிடமிருந்து திரட்டப்படும் எண்ணங்கள் மற்றும் யோசனைகளை ஒரு செயல் திட்டத்தில் கடைப்பிடிக்க பல காரணங்கள் உள்ளன – அவற்றின் நன்மைகளில் அடங்குபவை:

| ✓ | பலன்கள் |
|---|---|
| | அக்கம்பக்கத்தவர் பற்றிய அறிவை அதிகரித்தல். |
| | உங்கள் அக்கம்பக்கத்தவர் இணைவதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல். |
| | அக்கம்பக்கத்தில் உள்ளவர் சொந்தம் என்ற உணர்வை அதிகரித்தல். |
| | குடியிருப்பாளர்கள் அக்கம்பக்கத்தில் நாட்டம் கொள்வதற்கும் ஈடுபடுவதற்கும் வாய்ப்புகளை அதிகரித்தல். |
| | பாதுகாப்பு, தகவல்களுக்கான அணுகல் மற்றும் அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களுக்குள் அதிகாரமளித்தல் ஆகியவற்றை அதிகரித்தல். |
| | அக்கம்பக்கத்தினரிடையே திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவத்திற்கான வாய்ப்புகளை அதிகரித்தல். |

# B அணுகுமுறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எட்டு (8) கொள்கைகள் உங்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்தினுள்ளாக உள்ள அக்கம்பக்கத்தவருக்கான செயல் திட்டங்களை உருவாக்குவதற்கான அணுகுமுறையை கோடிட்டுக் காட்டுகின்றன. ஒவ்வொரு அக்கம்பக்கச் சுற்றுப்புறமும் தனித்தன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்து, அக்கம்பக்கத்துச் சுற்றுப்புறங்களை இணைத்து செயல்படுவதற்கு சில பொதுவான தளங்களை நிறுவுவதற்கு இந்தக் கொள்கைகள் வழிகோலுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | **குடியிருப்புவாசியால் வழிநடத்தப்படுவது** | குடியிருப்புவாசிகள் முன்முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வார்கள் மற்றும் தங்களின் அக்கம்பக்கத்தில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் யோசனைகள் மற்றும் திட்டங்களை, தாமே நிறைவேற்றவேண்டும் என்ற சுயபொறுப்பு கொள்வார்கள். |
| 2 | **செயல் சார்ந்தது** | குடியிருப்புவாசிகள் தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தில் அர்த்தமுள்ள மற்றும் அளவிடக்கூடிய செயல்களை உந்த வைக்கவும் மாற்றவும் யோசனைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவார்கள் |
| 3 | **சொத்துக்கள் மீது கவனம் குவித்தல்** | குடியிருப்பாளர்கள் தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களில் காணப்படும் வசதிகள் மற்றும் சொத்துக்களில் கவனம் செலுத்துவார்கள் மற்றும் அக்கம்பக்கத்தினருக்கு அவற்றின் பயன்பாடு மற்றும் நன்மைகளை அதிகரிக்க வழிகளைக் கண்டுபிடிப்பார்கள். |
| 4 | **அனைவரையும் உள்ளடக்கி கூட்டாக பணிசெய்தல்** | நடைமுறைகள் மற்றும் திட்டங்கள் நியாயமானவை, சமமானவை மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் சொந்தமானது என்ற உணர்வை வளர்ப்பதை உறுதிசெய்ய குடியிருப்பாளர்கள் அக்கம்பக்கத்தவர் சங்கத்தில் கூட்டாகப் பணியாற்றுவார்கள். |
| 5 | **அடையக்கூடிய விளைவுகள்** | கிடைக்கக்கூடிய நிதியின் அடிப்படையில் (நிதி திரட்டுதல் அல்லது சமூக மானியங்கள் மூலம்) யதார்த்தமான மற்றும் அடையக்கூடிய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளில் குடியிருப்புவாசிகள் பணியாற்றுவார்கள். |
| 6 | **நேர்மறையான தாக்கங்கள்** | செயல் திட்டங்களானவை, அக்கம் பக்கத்தினருக்கு சாதகமான தாக்கங்கள் மற்றும் மாற்றத்திற்கு வழிவகுக்கும் திட்டங்களை கண்டறிந்து செயல்படுத்த வேண்டும். |
| 7 | **அளவிடக்கூடியவை** | திட்டப்பணிகள் மற்றும் முன்முயற்சிகள் நேர்மறையான தாக்கங்கள் மற்றும் விளைவுகளைக் காட்டும் அளவீடுகள் மற்றும் தரவுகளுடன் CSWO வுக்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டும். |
| 8 | **பொறுப்பு கொடுக்கப்படக்கூடியது** | உடன்படிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நடத்தைத் தரத்திற்கு ஏற்ப அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் பொறுப்பேற்கும், மேலும் அக்கம்பக்கத்தவர் சங்க இணைப்புத் திட்டத்தின் இலக்குகளுக்கு இணங்கும் வகையில் நிதி மற்றும்/அல்லது திட்டப்பணிகளை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

# C சொத்தை அடையாளம் காணும் செயல்பாடு

***எனது அக்கம்பக்கத்தில் எத்தனை சமுதாயங்கள் உள்ளன?***

இந்தச் செயல்பாடு இணைப்பு மற்றும் சொந்தத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில் அக்கம்பக்க சொத்துக்களை வரையறை செய்வதற்கான வாய்ப்பையும் இது வழங்குகிறது. அக்கம்பக்கத்தில் உள்ள இந்த அடையாளம் காணப்பட்ட சமூக மக்கள் அக்கம்பக்க சங்கத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை ஆதரிக்க இயலலாம் அல்லது அதிலேயே உறுப்பினர்களாகலாம்.

உதாரணமாக, ஒரு அழகுபடுத்தும் திட்டத்திற்கு தோட்டக்காரர்கள், ஓவியக் கலைஞர்கள் மற்றும் இயற்கை எழில் கூட்டுபவர்கள் போன்ற பல்வேறு திறமை கொண்டவர்கள் தேவைப்படலாம்.

தோட்டக்கலை சமூகம், ஓவியக் கலைஞர் சமூகம் மற்றும் இயற்கை எழில் கூட்டுபவர்கள் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஏற்கனவே அழகுபடுத்தும் திட்டத்தில் பங்கேற்கும் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தில் வசிப்பவர்களாக இருக்கலாம், மேலும் தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தை மேம்படுத்த தங்கள் திறமைகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடையலாம்.

இந்தச் செயல்பாடு அக்கம்பக்கத்தவர் சங்கங்களை அதன் தற்போதைய உறுப்பினர்களுக்கு அப்பாலும் கவனம் செலுத்த ஊக்குவிக்கிறது, அதன் மூலம் குழுவையே உயர்த்துகிறது மற்றும் குழுவின் முயற்சிகள் மற்றும் தாக்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பல்வேறு குரல்கள் மற்றும் அனுபவங்களின் வளமையை அதிகரிக்கிறது.

COMMUNITY SAFETY & WELL-BEING



# பாகம் ஏழு

# உங்கள் அருகாமையில் இருக்கும் அக்கம்பக்கத்தின் சிறப்பம்சங்கள்

அக்கம்பக்கத்தவர் சங்கங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கு தங்களின் பாதுகாப்பு உணர்வை எவ்வாறு மேம்படுத்துவது, அக்கம்பக்கத்தில் உள்ள கவலைகள் குறித்து எவ்வாறு அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எவ்வாறு அதிகாரம் பெறுவது என்பதைப் பற்றி அறிந்துகொள்ள இந்த சங்கங்கள் உதவுகின்றன. அக்கம்பக்கத்தவர் சங்கங்கள் அக்கம்பக்கத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையை கட்டமைக்கின்றன, மேலும் நகரமெங்கும் செயல்பாடுள்ள பல குழுக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவதில் மும்முரமாக இருக்கின்றன. பிராம்ப்டனில் ஏற்கனவே உள்ள அக்கம்பக்கத்தவர் சங்கங்களின் சில குறிப்புகள் மற்றும் சிறப்பம்சங்களைப் பாருங்கள்!

- **ஃப்ளெட்ச்சர்'ஸ் க்ரீக் (Fletcher's Creek) SNAP (வார்டுகள் 1 & 5)**

ஃப்ளெட்ச்சர்'ஸ் க்ரீக் (Fletcher's Creek) அக்கம்பக்கச் சுற்றுப்புறமானது, க்ரெடிட் வேல்லி கன்சர்வேஷன் (Credit Valley Conservation), பிராம்ப்டன் நகரம், பீல் பிராந்தியம், உள்ளூர்வாசிகள், சமூக உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுடன் இணைந்து Fletcher's Creek Sustainable Neighbourhood Action Plan (SNAP) ஐ உருவாக்கியது. இந்தக் குழு ஆதாரவளங்கள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், மரம் நடுதல், நிலைத்து நிற்கவல்ல வகையில் தான் வசிக்கும் பகுதியில் இயற்கை நில எழில் கூட்டுதல் மற்றும் சமூக ஈடுபாடு உள்ளிட்ட பல அக்கம்பக்கச் சுற்றுப்புற முயற்சிகளில் பணியாற்றவும் ஒன்று சேர்ந்துள்ளது.

- **ஹார்ட் லேக் ஹாப்பெனிங்க்ஸ் (Heart Lake Happenings) (வார்டுகள் 2 & 6)**

2012 இல் உருவாக்கப்பட்ட இந்த குடியிருப்புவாசிகளின் குழு ஹார்ட் லேக் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்தில் வாழ்கின்றனர், வேலை செய்கின்றனர் அல்லது விளையாடுகின்றனர்; மேலும் சமூகக் கட்டமைப்பையும் சிறந்த அக்கம்பக்க உணர்வையும் வளர்ப்பதற்காக Facebook மற்றும் நேரில் ஒன்றுகூடுகிறார்கள். 3,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறம் தொடர்பான யோசனைகள் மற்றும் தலைப்புகளில் பங்கேற்கிறார்கள், பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் விவாதிக்கிறார்கள்.

- **பீல் கிராமம் (Peel Village) (வார்டுகள் 3 & 4)**

இந்தக் கிராமத்தின் அக்கம்பக்கச் சுற்றுப்புறம் சுறுசுறுப்பான குடியிருப்பாளர்களைக் கொண்டுள்ளது; அவர்கள் தங்கள் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும், தங்கள் அக்கம்பக்கச் சுற்றுப்புறத்திற்கான எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் முன்னணியில் இருக்க ஒருவருக்கொருவர் அதிகாரம் அளிக்கிறார்கள்.

- **ப்ரமீலி(Bramalea) SNAP (Wards 7 & 8)**

இந்தத் திட்டமானது, மாதாந்திர நெட்வொர்க் சந்திப்புகளுக்கு வழி வகுத்து, குடியிருப்புவாசிகளின் தலைமையின் பேரில் வருடாந்திர நிகழ்வுகளுக்கு வசதி ஏற்படுத்தித் தருவதுடன், உள்ளூர் கூட்டாண்மை மேம்பாடு மற்றும் உள்ளூர் மறுமலர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவாக அக்கம்பக்கத்தவர் ஈடுபாட்டின் மீது கவனம் செலுத்துதல் ஆகியவற்றையும் கொண்டிருக்கிறது.

- **மவுண்ட் ராயல் கம்யூனிட்டி குரூப் (Mount Royal Community Group (வார்டுகள் 9 & 10)**

மவுண்ட் ராயல் சமூகக் குழுவானது, அதன் குடியிருப்புவாசிகளிடையே ஒரு நெருக்கமான சமூகத்தை உருவாக்கி, வேடிக்கையான திரைப்படம் திரையிடும் இரவுகள் மற்றும் செயல்பாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலமும், தங்களின் பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலமும், மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தவும், உள்ளூர் அரசாங்கத்துடன் அக்கம் பக்கத்தவர்களுக்காக வாதிடுகிறது.



COMMUNITY SAFETY & WELL-BEING

# பாகம் எட்டு

# ஆமோதிப்புகள்



# ஆமோதிப்புகள்

இந்த வழிகாட்டியை உருவாக்க, ஒன்ட்டாரியோ முழுவதுமாக, தற்போதுள்ள அக்கம்பக்கத்தவர் சங்கத் திட்டங்களின் ஆளுமை எல்லை வரம்பிற்குள் CSWO ஸ்கேன் செய்தது. அதனுடன், CSWO, நமது சமூகத்தில் அக்கம்பக்கத்தவர் சங்கங்களை நிறுவுவதற்கும் நிலைத்து நிற்கச் செய்வதற்கும் குடியிருப்பாளர்களுடன் ஒரு கட்டமைப்பைப் பகிர்ந்து கொள்வதிலும் பரவசமடைந்துள்ளது. நமது அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த, குடியிருப்பாளர் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

மக்கள் பாதுகாப்பாகவும் சொந்தம் எனும் உணர்வுடனும் சமூகங்களுக்குள் பிராம்ப்டனுக்கு அதிகாரமளிக்கின்ற மற்றும் இணைக்கின்ற புதிய மற்றும் பரவசமூட்டும் வழிகளில் சமூகத்திற்குப் பயனளிக்கும் அக்கம்பக்கத்தவருக்கான திட்டப்பணிகளை நாங்கள் வழங்குவதன் மூலம், அக்கம்பக்கத்தவர் சங்கங்களுக்கு ஆதரவளிப்பதில் சமூக சேவைகள் துறை மகிழ்ச்சியடைகிறது.

பிராம்ப்டன் ஒரு அழகான நகரமாகும், இது அனைவரும் ரசிக்கும் வகையில் துடிப்பான திறந்தவெளி இடங்களைக் கொண்டுள்ளது. நமது நகரத்தை சுத்தமாகவும், பசுமையாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கிறார்கள்!

# குறிப்புகள்



COMMUNITY SAFETY
& WELL-BEING

சமுதாயப் பாதுகாப்பு & நல்வாழ்வு அலுவலகம்
2 வெலிங்க்டன் ஸ்ட்ரீட் மேற்கு பிராம்ப்டன்
ஒன்ட்டாரியோ L6Y 4R2

CSWO@brampton.ca
www.brampton.ca/communitysafety

மாற்றுப் படிவ வடிவங்கள் வேண்டுகோளின் பேரில் கிடைக்கும். கோரிப்பெற accessibility@brampton க்கு மின்னஞ்சல் செய்யவும்.

BRAMPTON